Register No. | | | | | | | | |

**FSD** **3975-18**

(For the candidates admitted from 2009–2010 to 2015-2016)

B.A.,B.L./B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Fourth Year — Seventh Semester

## ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. The exercise of discretion must not be arbitrary, fanciful and influenced by extraneous considerations – Comment.

   உளத்தேர்வின்படி செயல்படுத்தப்படும் அதிகாரத்தை தன்னிச்சையாக, கற்பனையாக மற்றும் உளப்போக்கில் தொடர்பற்ற காரணங்களை கருத்தில் கொண்டு செயல்படுத்தக் கூடாது – கருத்துரை தருக.

https://www.tndaluonline.com

2. "The concept of Locus standi has been changed beyond recognition". Elucidate.

"வழக்கீடு உரிமை என்ற கருத்தமைவு அங்கீகரிப்பிற்கு அப்பால் மாற்றப்பட்டுள்ளது". எடுத்துரைக்கவும்.

3. "Everything must be done according to Law". Explain this statement with the help of Dicey's "Rule of Law".

"அனைத்துச் செயல்களும் சட்டத்தின்படித்தான் நிறைவேற்றப்பட வேண்டும்". இக்கூற்றினை 'டைசியின்' 'சட்டத்தின் ஆட்சி'க் கோட்பாட்டின் உதவியுடன் விவரிக்கவும்.

4. Narrate with decided cases the application of promissory estoppel in Administrative law and the circumstances under which promissory estoppel does not apply.

நிருவாக சட்டத்தில் உறுதிமொழி முரண்தடைக் கோட்பாட்டின் பயன்பாட்டையும் மற்றும் அதனை பின்பற்றுவதற்கான விதி விலக்குகளையும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் எடுத்துக் கூறுக.

5. Explain the judicial control of delegated legislation in India.

இந்தியாவில் அதிகார ஒப்படைவு பெற்று ஆக்கப்படும் விதிகளை நீதிமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதை விளக்கவும்.



## PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Franks Committee.

பிராங்க்ஸ் குழு.

(b) Droit – Administratiff.

ட்ராயிட் அட்மினிஸ்ட்ரேடிவ்.

(c) Henry VIII Clause.

ஹென்றியின் எட்டாவது வகையம்.

(d) Ridge *v.* Baldwin.

ரிட்ஜ் எதிர்-பால்ட்வின்.

(e) Doctrine of legitimate expectations.

சட்டவழி எதிர்பார்ப்புக் கோட்பாடு.

(f) Sovereign function.

இறைமைச் செயல்.

(g) Speaking order.

பேசும் ஆணை.

(h) Domestic Tribunals.

துறை சார்ந்த தீர்ப்பாயம்.



https://www.tndaluonline.com

(i) Personal Bias.
தன் மனச்சாய்வு.

(j) Administrative Finality.
நிருவாக இறுதிமுடிவு.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Vinod, an employee, was dismissed from service by the chairman of the company. Against this, Vinod preferred appeal to the Board of Directors. The chairman was ex-officio member of the Board. His opinion was obtained by the Board relating to this matter. Ultimately, the decision of the chairman was confirmed. Vinod challenged this before the court. Will he succeed in his attempt?

வினோத் என்ற பணியாளர் நிறுமத்திலிருந்து தலைவரால் நீக்கப்படுகிறார். இதனை எதிர்த்து வினோத் இயக்குநர்கள் குழுமத்திற்கு மேல்முறையீடு செய்கிறார். நிறுமத் தலைவரும் பதவி வழி அக்குழுமத்தில் பங்கு கொள்கிறார். அவருடைய கருத்தும் இது தொடர்பாக பெறப்படுகிறது. இறுதியாக தலைவரின் முடிவு உறுதி செய்யப்படுகிறது. இதனை எதிர்த்து வினோத் நீதிமன்றம் செல்கிறார். அவரின் முயற்சியில் வெல்வாரா?



8. The M.B.A. Entrance examination was cancelled due to mass copying at a particular centre. The university had decided to conduct fresh examination. Some of the students approached the court on the ground that they were not given opportunity to explain their case. Will they succeed?

வணிக மேலாண்மை நிறைஞர் படிப்பு நுழைவுத் தேர்வில் அதிகமானவர்கள் ஒரு குறிப்பிட்ட தேர்வு மையத்தில் தேர்வு முறையறு செயலில் ஈடுபட்டதால் அத்தேர்வானது நீக்கப்பட்டது. பல்கலைக்கழகம் மறுதேர்வு நடத்த முடிவு செய்தது. சில மாணவர்கள் தங்களின் விளக்கத்தை கேட்காமல் முடிவு செய்யப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தை நாடுகின்றனர். அவர்கள் வெற்றி பெறுவார்களா?

9. Sampath is an Income-Tax Assessee. An assessment order was made by Tax officer against Sampath. This order was challenged by him on the ground of violation of the principles of Natural Justice. The High Court dismissed it on merit. Sampath filed another writ petition with some additional points not raised in the earlier writ petition. Will he succeed?

சம்பத் என்பவர் வருமானவரி செலுத்துபவர். அவருக்கு எதிராக வருமானவரி அலுவலர் மதிப்பீட்டு ஆணை பிறப்பித்தார். அந்த ஆணை இயற்கை நீதி கோட்பாட்டிற்கு புறம்பானது என சம்பத் வழக்கிடுகிறார். உயர் நீதிமன்றம் அதனை ஆய்வு செய்து தள்ளுபடி செய்கிறது. சம்பத் மறுபடியும் வேறு ஒரு நீதிப்பேராணை மனுவை முன்னிட்டு முதல் மனுவில் கூறாத சில கேள்விக்குரியனவற்றை முன்னிடுகிறார். அவர் வெற்றி பெறுவாரா?



https://www.tndaluonline.com

10. The 'Parent Act' authorised Deputy Commissioner to prohibit manufacture of Beedis in certain areas. A general notification was issued by him whereby he prohibited all persons from carrying on this business. This was challenged in a Court of Law. Decide.

"முதன்மைச் சட்டமானது" துணை ஆணையருக்கு சில இடங்களில் புகையிலை தொழில் செய்ய தடை செய்யும் அதிகாரத்தை வழங்குகிறது. ஒரு பொதுவான அறிவிப்பு வாயிலாக அனைவரையும் அந்த தொழிலினை செய்யாமல் தடுக்கிறார். இந்த ஆணையினை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு முன்னிடப்படுகிறது. முடிவு செய்க.

11. 'X' is detained by the executive magistrate claiming that his presence is dangerous to the security of the state. Later on, finding that he was innocent, he was released. 'X' claims compensation for the illegal detention – Decide.

'X'ன் செயல்பாடு நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் என ஆட்சித்துறை நடுவர் வாயிலாக காவலில் வைக்கப்பட்டார். பின்பு அவர் அவ்வாறு ஆபத்து விளைவிக்கும் செயலில் ஈடுபடவில்லை என அறுதியிடப்பட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். தன்னை சட்டத்திற்கு புறம்பாக காவலில் வைத்ததாக 'X' இழப்பீடு கோருகிறார். முடிவு செய்க.



12. Under the Essential Commodities Act, the authority has fixed the price of the essential commodities. Ravi, a merchant, challenged the price fixation on the ground that he was not heard before fixing the price. Decide.

இன்றியமையா பண்டங்கள் சட்டத்தின்படி ஒரு அலுவலர் இன்றியமையா பண்டங்களின் விலையை தீர்மானிக்கின்றார். ரவி என்ற வணிகர் விலை தீர்மானம் செய்யப்படும் முன்பு தனது கருத்துக்களை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று மறுதலிக்கின்றார். – முடிவு செய்க.

---



https://www.tndaluonline.com